152—

நெடுஞ்சாலை விரிவுபடுத்துதல்

***7228—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியிலிருந்து கொடைக்கானல் செல்லும் நெடுஞ்சாலை விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை இங்கே அளிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) பழனியிலிருந்து கொடைக்கானல் செல்லும் நெடுஞ்சாலையை விரிவுபடுத்துவது குறித்த பரிசீலனை, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டபோது இல்லாமல் இருந்தது. இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. த. பூவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலிருந்து கொடைக்கானல் செல்கின்ற சாலை முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பழனியிலிருந்து கொடைக்கானல் செல்கின்ற சாலையில் சுற்றுலாப் பயணிகள் அதிகமாகச் செல்கின்ற காரணத்தினாலும்—அதேபோல பழனியை அடுத்த ஆயக்குடி பகுதியிலேயிருக்கின்ற கொடைக்கானல் மலையில்—பெருமாள்மலை வடகுறிஞ்சியில் விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும் அந்த மலையிலே விளைகின்ற காப்பி, எலுமிச்சை, பலாப்பழம், மாதுளை, பேரி, நெல்லிக்கனி போன்றவை எல்லாம் பழனிக்குத்தான் கொண்டுவரப்பட வேண்டும். அந்த அடிப்படையில் வாகனப் போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்தச் சாலை விரிவுபடுத்தப்படுமா என்று நான் முதலில் கேள்வி கேட்டிருந்தேன். ஆய்வில் உள்ளது என்று இன்றைக்கு சொன்னதற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத்

1999 மார்ச் 23]

துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்ட அமைச்சருக்கும், அந்தத் தொகுதி மக்களுடைய சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, பழனியின் நீண்டகால கோரிக்கையாகவுள்ள புறவழிச் சாலைத் திட்டம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாவிற்கு சீக்கிரம் வாருங்கள்.

திரு. த. பூவேந்தன்: ஏழு கிலோ மீட்டர் நீளமுள்ள புறவழிச்சாலையாக இருக்கிறது. அதில் 6 reach எடுக்கப்பட்டு ஒரு reach இன்னும் நிலுவையில் இருக்கிறது. அதையும் இந்த ஆண்டு புறவழிச்சாலைத் திட்டத்தில் எடுத்துக்கொள்வார்களா? கொடைக்கானல் சாலை விரிவுபடுத்தப்படுவது இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பழனி-கொடைக்கானல் மலைச் சாலை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1971-72 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டதுதான். அதற்கு முன்பு அந்தச் சாலையில்லை. இங்கே நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோதெல்லாம் தமிழ்நாட்டுக்கு ஒரு பொற்காலம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மிகுந்த பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தச் சாலை Central Road Fund Scheme என்ற திட்டத்திலே முதன் முதலாகப் போடப்பட்டது. தமிழ்நாட்டுக்கே Central Road Fund Scheme வந்தது 1971-க்குப் பிறகுதான். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் ஒரு புதையலைத் தோண்டி எடுப்பதைப்போல எடுத்து, அந்தத் திட்டத்தை, மத்தியிலே இருக்கின்ற அந்தப் பணத்தை மாநில அரசுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். இந்தச் சாலையைப் பொறுத்தளவுக்கு இரண்டு பெரிய மாவட்டச் சாலைகளாக இருக்கின்றன. ஒன்று பழனி அடிவாரம் முதல் தேக்கன்தோட்டம் வரை; அது 13.2 கிலோமீட்டர். இரண்டாவது கொடைக்கானல்-பழனி சாலை; அது 39.6 கிலோமீட்டர். இந்த இரண்டு சாலைகளையும் அகலப்படுத்தி, உறுதிப்படுத்தி, விரிவுப்டுத்துவதற்கு ஏறத்தாழ 600 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இப்போது இந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தை அரசு உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் இது குறித்து கலந்துபேசி இந்தத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்ற

வேண்டும் என்று நெடுஞ்சாலைத் துறை விரும்புகிறது. அதற்கு மாநில அரசினுடைய நிதியாதாரம் போதிய அளவு இல்லாத காரணத்தினால், இந்தத் திட்டத்தை வேறு ஏதாவது ஒரு திட்டத்தின் மூலம் செயல்படுத்தலாமா என்று யோசித்து, கட்டுதல், இயக்குதல், ஒப்படைத்தல் என்று சொல்லக்கூடிய BOT திட்டத்தில் இதைச் செய்யலாமா என்பதற்காக நிதித் துறைச் செயலாளர், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர் மற்றும் நகர வளர்ச்சித் துறைச் செயலாளர் ஆகிய மூன்று பேரைக்கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்கள் கடந்த 7-1-1999 அன்று ஆய்வு செய்திருக்கிறார்கள். மேலும் ஆய்வு செய்து இந்தத் திட்டத்தை BOT திட்டத்திலே செயல்படுத்தினால் வெற்றிகரமாக அமையும் என்று நான் நம்புகிறேன். அதற்கான வகையிலே இந்தத் திட்டத்தை அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. அறிக்கை கிடைத்தவுடன் இது பற்றி முடிவு எடுக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழனி புறவழிச் சாலையைப் பொறுத்தவரைக்கும் அதுவும் நடவடிக்கையில் இருக்கிறது. அந்தச் சாலை இப்போது தேசிய நெடுஞ்சாலையாக ஆகியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசினுடைய நிதி ஆதாரத்தோடு பழனி புறவழிச் சாலையை அமைக்கிற திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

வினா எண் 153, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

153—

அருள்மிகு வாழைத்தோட்ட அய்யன் கோவிலுக்குக் கூடுதல் வசதிகள்

*** 16007—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—